**DATED : 18.11.2025 OS.No. 440/2024**

**பெயர் - திரு தனசிங் (Pw1)**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

1) எனது மனை எண்.31 ஐ சுற்றிலும் எல்லை கற்கள் உள்ளனவா? என்றால் அத்துக்கல் கிழக்கு பக்கம் மட்டும் இருந்தது. 1ம் பிரதிவாதி பொக்லைன் வைத்து இடத்தை நிரவிய போது, அத்துக்கல்லை தள்ளி விட்டார்கள். எப்போது என்று தேதி ஞாபகமில்லை.

2) மேற்கண்ட சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த 1, 2 பிரதிவாதிகள் என்னுடைய நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து, இடையூறு செய்கிறார்கள் என்று எப்போது இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் 2024 ல் இவ்வழக்கை தாக்கல் செய்தேன்.

3) நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடத்தை 1ம் பிரதிவாதி வேனுகோபால் எடுத்துக் கொண்டார்கள் எனவும், அந்த இடம் எனக்கு வேண்டும் என்று கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

4) இந்த வழக்கின் உண்மை தன்மை தெரிய வேண்டும் என்றால் நீதிமன்ற ஆணையர் வந்து அளக்க வேண்டும் என்று நான் மனு தாக்கல் செய்து விவரம் தெரியுமா? என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் வந்து நிலத்தை அளந்து, அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா? என்றால் அளந்த விவரம் தெரியும். அறிக்கை தாக்கல் செய்த விவரம் தெரியாது. அந்த அறிக்கையின் விவரத்தை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

5) அந்த அறிக்கைக்கு ஆட்சேபனை உள்ளதாக மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் ஆட்சேபனை உள்ளது. ஆனால் மனு தாக்கல் செய்யவில்லை. நான் இவ்வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டு சொத்தில் எந்த வித மாற்றமும் செய்யக்கூடாது என்று நீதிமன்றத்தால் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா? என்றால் தெரியும். அந்த உத்தரவு தெரிந்த பின்னர் அந்த இடத்தில் நான் யாரும் அத்துமீறி பிரவேசிக்க கூடாது என்று அறிவிப்பு பலகை வைத்தேன்

என்றால் சரிதான்.

6) மேற்கண்ட அறிவிப்பு பலகை வைக்க நீதிமன்றத்தில் அனுமதி பெற்றேனா? என்றால் இல்லை. தினமும் வந்து, இடத்திற்குள் நுழைந்து அடியாட்கள் மிரட்டியதால் அறிவிப்பு பலகை வைத்தேன்.

7) இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வழக்கு சொத்தில் உள்ள காம்பவுண்டை நான் அகற்றினேனா? என்றால் எனது வீட்டிற்கு முன்புறம் உள்ள காம்பவுண்டை தான் எடுத்தேன். அறிவிப்பு பலகை வைத்த பின்பு தான் அந்த காம்பவுண்டை நான் எடுத்தேனா என்றால் இல்லை. அதற்கு முன்னரே எடுத்து விட்டேன்.

8) நீதிமன்ற ஆணையரும் தனது அறிக்கையில் நான் அந்த காம்பவுண்டை எடுத்தை குறிப்பிட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா? என்றால் எனக்கு தெரியாது.

9) இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதி மீது PCR வழக்கு கொடுத்தேனா? என்றால் கொடுத்தேன். இந்த வழக்கு சொத்தில் சரியாக விசாரணை செய்யாமல் 1ம் பிரதிவாதி பட்டா வாங்கியுள்ளதாக கூறுவதற்கு நான் மேல்முறையீடு செய்துள்ளேனா? என்றால் செய்துள்ளேன். அந்த மேல்முறையீட்டு ஆவணங்களை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10) நான் கிரயம் வாங்கிய சொத்து பூமியிலே குறைவாக உள்ளது எனவும், அதை நான் தெரிந்து தான் கிரயம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய இடம் நான் வாங்கும் போது சரியாக தான் இருந்தது.

11) 1ம் பிரதிவாதி நான் கிரயம் பெறுவதற்கு முன்னரே 30 ஆண்டுகளுக்கு முன்பு கிரயம் பெற்று அனுபவம் செய்து வந்தவர்களிடம் கிரயம் பெற்றுள்ளபடியால், வழக்கு சொத்தில் அனுபவ பாத்தியம் சித்தித்துள்ளது என்றால் சரியல்ல.

12) நான் கூறுவது போல் எந்த ஒரு காலத்திலும் 1ம் பிரதிவாதி என்னுடைய சொத்தில் அத்துமீறி பிரவேசிக்க வில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் குறைவான அளவுடன் சொத்தை கிரயம் பெற்று விட்டு, 1ம் பிரதிவாதிக்கு கேட்பதற்கு ஆள் இல்லாததால் அவருடைய சொத்தை அபகரிப்பதற்காக நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

13) ஆகவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**(2ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக கூறினர்)**